கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.274/2012**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 06.10.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 06.10.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முத்துராஜ் | வயது.. | 59 |
| தந்தை பெயர்.. | தில்லை சிதம்பர நாடார் | கிராமம்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 என்னுடைய தந்தை வழி பாட்டனார் ஆன முத்துமாணிக்கம் ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரிதான். ஆகையால் அந்த ஆவணத்தில் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 குறித்து என்னுடைய வழக்குரை மற்றும் ஏற்கனவே தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்திற்கும் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 எந்த தொடர்பும் இல்லை என்றாலும் பிரதிவாதிகளே அளைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களின் மூலமாக தான் எனக்கு அடிப்படை உரிமை கிடைக்கப்பெற்றது. இந்த வழக்கே நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram